செ.வெ.எண்: 29 நாள்: 12.10.2021

## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு, நவம்பர் - 2021

## செய்திகுறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

நவம்பர் 2021-இல் நடைபெறவுள்ள தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு 01.10.2021 அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித்தேர்வர்கள் **11.10.2021 (திங்கள்கிழமை) முதல் 18.10.2021 (திங்கள்கிழமை) வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை (14.10.2021 முதல் 17.10.2021 வரையிலான விடுமுறை நாட்கள் நீங்கலாக)** www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று On line மூலம் பதிவு செய்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட **நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 20.10.2021 அன்று தட்கல்** திட்டத்தில் ரூ.500/- கூடுதலாக செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/- மற்றும் ஆன்லைன் பதிவுக்கட்டணம் ரூ.50/ மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம். தட்கலில் விண்ணப்பித்த தேர்வர்கள் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.675/– செலுத்த வேண்டும் (125+50+500)

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய**
   1. **முதன் முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல்/பதிவுத்தாள் நகல் /பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமா்ப்பிக்க வேண்டும்.

   2. **ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின் /சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமா்ப்பிக்க வேண்டும்.

**தனித்தேர்வர்கள் ரூ.42/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை** ஒன்று விண்ணபத்துடன் இணைத்து சமா்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவா் தெரிவிக்கின்றாா்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**